வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 29.11.2025 சனிக்கிழமை | இதழ் : 333 | பக்கங்கள் : 08

## அத்தியாவசிய சேவைகள் பிரகடனம்!

கொழும்பு, நவ. 29

பேரிடர் பாதிப்புகளையடுத்து பல முக்கிய சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்திய வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வெளியிட்டுள்ளார்.

இதன்படி, மின்சார விநியோகம் அதனுடன் இணைந்த அனைத்து சேவைகளும் எரிபொருள், எரிவாயு விநியோகம்,

07

## டித்வா புயல் இன்று கரையை கடக்கிறது

- வடக்கில் இன்றும் மழை தொடரும்
- காற்றின் வேகமும் அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், நவ. 30

டித்வா புயலின் மையப்பகுதி இன்று சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்துக்கு அண்மையாக கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புயலின் நகர்வு வேகம் குறைவாக உள்ளமையால் கரையைக் கடக்கும் நேரமும் தாமதமாகும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இன்றைய தினமும் வடக்கு மாகாணத்தில் மிதமானது முதல் கனமானது வரையான மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றிரவு அவர் வெளியிட்ட காலநிலை அவதானிப்பு அறிக்கையில்,

நேற்றிரவு 10 மணியளவில் டித்வா புயல் திருகோணமலையின் குச்சவெளியில் மையம் கொண்டிருந்தது. இது வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. இது எதிர்பார்த்த வேகத்தில் நகரவில்லை. தற்போது மணிக்கு 5 கிலோமீற்றர் வேகத்திலேயே

07

## சீரற்ற காலநிலையால் பல்லாயிரம் பேர் பாதிப்பு

- முல்லைத்தீவு, மன்னாருடனான தொடர்பு துண்டிப்பு
- வவுனியாவுடன் வடக்கு, தெற்கு போக்குவரத்து துண்டிப்பு
- தொலைத்தொடர்பு இன்மையால் மக்கள் பரிதவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 29

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற வானிலையால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கில் முல்லைத்தீவு, மன்னார் நகர பகுதிகள் முழுமையாக தொடர்புகளை இழந்துள்ளன. இதேபோன்று வவுனியாவுடன் வடக்கு, தெற்குக்கான போக்குவரத்து வசதிகளும் முழுமையாக தடைப்பட்டுள்ளன.

இதனிடையே, தென்னிலங்கையில் 91 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொடரும் மழையால் ஆறுகள் பெருக்கெடுத்துள்ளன. இதனால், பல பிரதேசங்களும் வெள்ளக்காடாகியுள்ளன.

நாடு முழுவதும் தொலைபேசி, இணைய வசதிகள் தடைப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதும் அவர்களை உதவிகள் சென்றடைவதும் தடைப்பட்டுள்ளன.

**முல்லைத்தீவில்**

டித்வா புயல் பாதிப்பால் முல்லைத்தீவு மாவட்டம் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. தொலைத்தொடர்பு தகவல்கள் முற்றாக செயலிழந்துள்ள நிலையில்

07

## இயற்கை பேரிடர் 90 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 29

நாட்டில் நிலவும் பேரிடரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90ஐ கடந்துள்ளது. அத்துடன், 100இற்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கண்டியில்...**

கண்டி மாவட்டத்தில் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் 50 பேர் உயிரிழந்தனர் என்றும் 67 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் மாவட்ட செயலாளர் இந்திக உடவத்த தெரிவித்துள்ளார். இதனிடையே, கண்டி - ஹசலக பகுதியில் நேற்று இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி உயிரிழந்த 7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 12 பேர் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

**பதுளையில்...**

பதுளை மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களால் நேற்று மாலை வரை 35 பேர் உயிரிழந்தனர். இதேநேரம் 28 பேர்

07

## இலங்கைக்கு நிவாரணம் இந்தியா அனுப்பி வைத்தது

### உயிரிழந்தோருக்கு மோடி இரங்கல்



புதுடில்லி, நவ. 29

இலங்கைக்கு அவசர நிவாரண பொருட்களையும் அத்தியாவசிய மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண ஆதரவையும் அனுப்பி வைத்துள்ளதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

02

## பாதிக்கப்பட்டவர்களை மீட்க ரூ. 3 ஆயிரம் கோடி ஒதுக்கீடு

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, நவ. 29

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளுக்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று காணொலி மூலம் அதிகாரிகளுடன் நடத்திய

02



## பாதிக்கப்பட்டோருக்கு உதவ இணைந்து செயல்படுவோம்

### ஜனாதிபதி அநுர குமார அழைப்பு

கொழும்பு, நவ. 29

"இந்தக் கடினமான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கவும் நாம் அனைவரும் செயல்திறனுடன் ஒன்றிணைந்து செயல்படுவோம்", என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க

02



### மக்களுக்கு நிவாரணம் வழங்க

## பிரதேச செயலாளர்களுக்கு ரூ. 5 கோடி செலவிட அனுமதி

கொழும்பு, நவ. 29

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பிரதேச செயலாளர் 5 கோடி ரூபாய் வரையில் செலவிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை சகல மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்களுக்கும் திறைசேரியின் செயலாளர் ஹர்ஷன சூரியபெரும

07

## ஏ-9 வீதியூடான போக்குவரத்து முற்றாக தடை

**குமார. கோகுலன்**

வவுனியா, நவ. 29

வவுனியாவில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் ஏ-9 வீதி வழியான போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டுள்ளது.

கனமழையால்

07

## உயர்தர பரீட்சை ஒத்திவைப்பு

### பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 29

க. பொ. த. உயர்தர பரீட்சை காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே அறிவித்துள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் டிசெம்பர் 6ஆம் திகதி நடைபெறவிருந்த பொது தகவல் தொழில்நுட்பம் பாடத்துக்கான பரீட்சையும் நடைபெறாது

07

## வவுனியாவில் இருவர் பலி!

**குமார. கோகுலன்**

வவுனியா, நவ. 29

வவுனியாவில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட காரிலிருந்து இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஏ-9 வீதியில் வவுனியா - சாந்தசோலை சந்திக்கு அண்மையாக கார் ஒன்றை

07

## தொலைபேசி, இணைய சேவைகளும் பாதிப்பு!

கொழும்பு, நவ. 29

நிலவும் சீரற்ற காலநிலையால் நாட்டின் பல இடங்களிலும் தொலைபேசி, இணைய வசதிகள் செயலிழந்தன.

07

## வல்வெட்டித்துறை நகர சபை தலைவராக சிவாஜிலிங்கம்

வடமராட்சி, நவ. 29

வல்வெட்டித்துறை நகர பிதாவாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய பேரவை) கட்சியின் சார்பில் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னைய தலைவர் தவமலர் சுரேந்திரநாதன் பதவியை துறந்த நிலையில் அவரின் இடத்துக்கு எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் 27 வருடங்களுக்கு பின்னர் அவர் மீண்டும் வல்வெட்டித்துறை நகர சபையின்

07

## புலம்பெயர்ந்த மக்களிடம் நிதியுதவி கோரும் அரசு

கொழும்பு, நவ. 29

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடரால் உயிரிழப்புகளும் சொத்து இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் புலம்பெயர் இலங்கையர்களிடம் அரசாங்கம் உதவி கோரியுள்ளது.

இதற்கமைய இலங்கையர்களுக்கும் வெளிநாட்டினருக்கும் திட்டமொன்று அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

07

## பாடசாலை விடுமுறை நீடிப்பு!

கொழும்பு, நவ. 29

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பாடசாலை விடுமுறை எதிர்வரும் டிசெம்பர் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று கல்வி

07

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவிசாளரின் வாகனம்மீது மரம் முறிந்து விழுந்தது!



யாழ்ப்பாணம், நவ. 29
வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். சுகிர்தனின் வாகனம்மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததால் வாகனம் பகுதியள வில் சேதமடைந்தது.

நேற்றைய தினம் சேந்தாங்குளம் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தத் தைப் பார்வையிடுவதற்காக தவிசாளர் அங்கு சென்றிருந்தார். இதன் போது அவரது வாகனம் மரம் ஒன்றின் கீழ் நிறுத்தப்பட்டிருந்தது.

அந்தநேரம் வீசிய பலத்த காற்றால் மரம் முறிந்து அவரின் வாக னத்தின்மீது விழுந்தது. இதனால் அது பகுதியளவில் சேதமடைந்தது. அந்தச் சமயம் வாகனத்தில் எவருக்கும் இருக்கவில்லை என்பதால் வேறு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. (ஐ-05)

## பேராறு அணையின் கீழ் வசிப்போரை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து



வவுனியா, நவ. 29
பேராறு அணையின் கீழ் பகுதியில் வசிப்ப வர்களை அவதான மாக இருக் குமாறு மாவட்ட அனர் த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள் ளது.

நேற்று வெள் ளிக்கிழமை இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது. கடந்த சில நாட்களாக வவுனியாவில் பெய்து வரும் மழையால் தாழ் நிலங்களில் வெள்ள நீர் தேங்கியு ள்ளதுடன், குளங்களின் நீர்மட் டமும் அதிகரித்துள்ளது.

இதனால், பேராறுக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அதன் 3 வான்கதவுக ளும் 4.81 மீற்றர் உயரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் நீர் செல்லும் பகுதி யிலும் பேராறு அணையின் கீழ் பகுதியிலும் வசிப்பவர்களும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-10)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவிகளுக்கு சைக்கிள்கள்



வடமராட்சி, நவ. 29
ஞானச்சுடர் 335ஆவது சஞ் சிகை வெளியீட்டு நிகழ்வில் மாணவிகள் இருவருக்கு சைக்கி ள்கள் அன்பளிப்பு செய்யப்ப ட்டன.

தொண்டைமானாறு சந்நிதி யான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பா ட்டில், ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று வெள்ளிக் கிழமை ஞானச்சுடர் கார்த்திகை மாத 335ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் வெளி யீட்டு ரையை மூத்த பத்திரிகையாளர் சி. தில்லைநாதன் நிகழ் த்தினார். மதிப்பீட் டுரையை அதிபர் செ. பரமேஸ் வரன் நிகழ்த்தினார். தொடர் ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப் பட்டன.

தொல்புரம் - சுழிபுரம், அச் சுவேலி தெற்கை சேர்ந்த இரு மாணவிகளுக்கு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-02)

# வீட்டின்மீது மண் சரிந்து குழந்தை உட்பட மூவர் பலி!

நுவரெலியா, நவ. 29
நாவலப்பிட்டியில் வீட்டின் மீது மண் சரிந்து விழுந்ததில் நேற்றைய தினம் குழந்தை உட் பட மூவர் உயிரிழந்தனர்.

நாவலப்பிட்டி பழைய ரயில் பாதைக்கு அருகில் அமைந்தி ருந்த வீடு ஒன்றின்மீதே மண் மேடு சரிந்தது. இதில், அந்த வீட்டிலிருந்த 3 மாத குழந்தை யும் இரு பெண்களும் உயிரிழந் தனர்.

சம்பவம் குறித்து அறிந்து அங்கு விரைந்த கிராம மக்களும் பொலிஸாரும் வீட்டிலிருந்தவர் களை மீட்க முயன்றனர். எனி னும், அவர்களின் சடலங்களை மீட்க முடிந்தது.

இதேசமயம், மோசமான காலநிலையால் நாவலப்பிட் டியில் இதுவரை ஐவர் உயிரி ழந்தனர். சுமார் 50 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என்று நாவலப்பிட்டி பிரதேச செய லாளர் தெரிவித்தார். (ஐ)

## வலி. வடக்கு சபையின் பாதீடு நிறைவேறியது

யாழ்ப்பாணம், நவ. 29
வலி. வடக்கு பிரதேச சபை யின் 2026ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

வலி. வடக்கு பிரதேச சபை யின் அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

இதன்போது, தவிசாளர் சோ.சுகிர்தனால் 2026ஆம் ஆண்டுக்கான பாதீடு முன்வைக் கப்பட்டது.

35 உறுப்பினர்களை கொண்ட சபையில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்து வம் செய்யும் 9 உறுப்பினர்கள் வாக்கெடுப்பை கோரினர். ஆனால், 22 உறுப்பினர்கள் வாக்கெடுப்பு தேவையில்லை என்று கூறினர்.

இதைத் தொடர்ந்து பாதீடு வாக்கெடுப்பின்றி நிறைவேறி யது. (ஐ-03)

## காரைநகர் வீதிக்கு பெருக்கெடுத்த கடல்

யாழ்ப்பாணம், நவ. 29
சீரற்ற காலநிலையால் யாழ் ப்பாண மாவட்டத்தின் பொன் னாலை - காரைநகர் வீதியில் கடல் நீர் பெருக்கெடுத் துள்ளது.

காற்றின் வேகம் அதிகமாக இருப்பதனால் கீரிமலை கடற் பகுதி கொந்தளிப்புடன் காணப் படுகிறது என்றும் அறிய வருகி றது. (ஐ)

## முத்து முஹமது எம். பி. பதவியை துறந்தார்!

கொழும்பு, நவ. 29
ஐக்கிய மக்கள் சக்தியின் தேசி யப் பட்டியல் பாராளுமன்ற உறு ப்பினர் இஸ்மாயில் முத்து முஹ மது தனது பாராளுமன்ற உறுப் பினர் பதவியை இராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளு மன்றில் விசேட உரையொன்றை ஆற்றி தனது பதவி விலகலை அறிவித்தார்.

சுய விருப்பத்துடன் கட்சியின் முடிவுக்கு அமைய தலைமைக்கு துரோகம் இழைக்காமல் பாரா ளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்கிறார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## வட மாகாண பரீட்சைகள் அனைத்தும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 29
நாட்டில் ஏற்பட்டுள்ள இயற் கைப் பேரிடரால் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வால் நடத்தப்படவிருந்த பரீட் சைகள் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆழ்வார்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் விவசாயப் போதனாசிரியர் தரம் III மற்றும் பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய் வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் இன்று சனிக்கி ழமை நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்தன.

எனினும், தற்போது நிலவும் சீரற்ற வானிலை, இடர் நிலையை கருத்தில்கொண்டு, இப்பரீட்சைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்ப டும் என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

### இலங்கைக்கு...

அத்துடன், "டித்வா சூறாவளி, சீரற்ற வானிலை காரணமாக தமது அன்புக்குரியவர்களை இழந்த இலங்கை மக்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்" என்றும் அவர் தனது "எக்ஸ்" சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களின் பாதுகாப்புக்கும் ஆறுதலுக்கும் விரைவான மீட்சிக்கும் நான் பிரார்த்திக்கிறேன். இந்தியாவின் "சாகர் பந்து" நடவடிக்கையின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உதவிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலைமைக்கு ஏற்ப மேலும் பல உதவிகள் மற்றும் ஆதரவை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த நேரத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாகவும் உறுதி யாகவும் நிற்கும்", என்றும் அவர் தனது பதிவில் குறிப் பிட்டுள்ளார். (ஐ)

### பாதிக்கப்பட்டவர்களை...

கலந்துரையாடலிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தகவல்களை வழங்குவதில் ஊடகங்கள் மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டும். அத்து டன், மீட்பு நடவடிக்கைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெறப்படும். அபாயகரமான பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணிகளை பொலிஸ், இராணுவம், அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அனர்த்த மற்றும் நிவாரண சேவைகளுக்காக 120 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. தேவைப்படின் மேலும் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப் படும். அத்துடன், மக்களை மீட்கும் நடவடிக்கைகளுக் காகச் சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்கான கலந்துரை யாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றும் அவர் கூறினார். (ஐ)

### பாதிக்கப்பட்டோருக்கு...

ஆளும் - எதிர்கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் ஏற்பட் டுள்ள அனர்த்த நிலைமையில் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பாதுகாப்பு தலைமையகத்தில் ஆளும் - எதிர்க்கட்சிக ளின் பிரதிநிதிகளை சந்தித்தபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமை மற்றும் நிவாரண நடவடிக்கைகளை செயல்திறனுடன் முன்னெடுப்பதற்காக தேவைப்பட்டால் அவசரகால சட்டத்தை அமுல்படுத்துமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பி னர்கள் இதன் போது பரிந்துரைத்ததுடன், அதற்காக முழு ஆதரவையும் வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
29.11.2023 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பேரனர்த்தமும் அரசியலும்

இயற்கை அனர்த்தங்கள் எதிர்பாராதது. என்னதான் முன்னெச்சரிக்கையுடன் இருந்தாலும் அரசாங்கம் வலுவான நிலையில் இருந்தாலும்கூட, பேரனர்த்தங்களின் விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியாது. கொரோனாவும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையும் முறையாக முகாமை செய்ய முடியாமல் போனபோது கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியை இழக்க வேண்டியேற்பட்டது. பிரச்னைகள் எவற்றுக்கும் கோட்டாபய காரணமல்ல. ஆனாலும், அரச தலைவர் என்னும் வகையில் அவர்மீதே மக்களின் கோபம் திரும்பியது.

நெருக்கடிகளை முகாமை செய்வதில்தான் ஓர் ஆட்சியின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. நெருக்கடிகளை முறையாக முகாமை செய்ய முடியாமல் போகும்போது, மக்கள் ஆட்சியாளர்மீதே கோபம் கொள்வர். ஆட்சியாளர்கள் எவ்வளவுதான் தங்களால் முடிந்த அனைத்தையும் முன்னெடுத்தாலும்கூட, பாதிக்கப்பட்டவர்கள் ஆட்சியாளர்கள்மீதே குற்றம் சுமத்துவர். எதிர்க்கட்சிகளும் எரியும் அடுப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்று விடயங்களை மிகைப்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றலாம் என்றே யோசிப்பர். இலங்கையின் அசிங்கமான அரசியலில் இதுவும் ஒன்று. அனர்த்தத்தை கையாள முடியாவிட்டால் நாட்டை எங்களிடம் ஒப்படையுங்கள் என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். அவரிடம் நாட்டை ஒப்படைத்தால் பெய்து கொண்டிருக்கும் மழை நின்றுவிடும் என்பது போன்று சிறுபிள்ளைத்தனமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி அநுர குமாரவைப் பொறுத்தவரையில் இது ஒரு சவாலான நெருக்கடிதான். அனர்த்தத்தின்போதான விளைவுகளையும் அனர்த்தத்தைத் தொடர்ந்து ஏற்படும் விளைவுகளையும் பெருமளவு பாதிப்புகளை தவிர்க்கும் வகையில் கையாள முடிந்தால் அதுவே, அரசாங்கத்தின் வெற்றியாகக் கருதப்படும் – மறுபுறம் பாதிப்புகள் அதிகமாகவும் முகாமை செய்வதில் தடுமாற்றங்களும் ஏற்படுமாக இருந்தால் அதுவே அரசாங்கத்தின் இயலாமையாகப் புரிந்து கொள்ளப்படும்.

பேரனர்த்தங்களின்போது சில மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக, மண்சரிவால் பலர் உயிரிழந்திருக்கின்றனர். ஆனால், இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றால் இதற்கு முன்னர் இருந்த அனைத்து ஆட்சியாளர்களும் பொறுப்பேற்க வேண்டும். மலையக மக்களின் வாழ்வை மேம்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் அனைத்துமே, கடந்த காலங்களில் பல அரசாங்கங்களின் அங்கமாக இருந்திருக்கின்றன. அவ்வாறான காலப்பகுதியில் பேரிடர்கள் ஏற்படும்போது எவ்வாறான பாதிப்புகள் அப்பகுதியை தாக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஆனால், அதற்கான முயற்சிகளை முன்னைய ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை.

இயற்கை அனர்த்தங்களின்போது, சில விடயங்கள் தடுக்க முடியாதவை. ஆனால், சில விடயங்கள் முயற்சித்தால் தடுக்கக்கூடியவை. மண்சரிவு ஆபத்து ஏற்படக்கூடிய இடங்களை முன்கூட்டியே அடையாளம் கண்டிருந்தால், இவ்வாறான அனர்த்த காலப்பகுதியில் முன்னெச்சரிக்கையுடன் மக்களை அப்பகுதியிலிருந்து அகற்றியிருக்கலாம். இவ்வாறான அனர்த்தங்கள் நிகழும்போது ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி அரசியல் செய்வதிலேயே கட்சிகள் கவனம் கொள்கின்றனவே தவிர, ஒவ்வொருவருக்குமான கூட்டுப் பொறுப்புப் பற்றி சிந்திப்பதில்லை.

## வட மாகாண மர நடுகை மாதம்
## கார்த்திகை - 2025

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."

- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி)



# ஐக்கிய மக்கள் சக்தி- ஐ.தே.க. நிச்சயமாக ஒன்றிணையும்!

### எஸ்.எம். மரிக்கார் கூறுகிறார்



கொழும்பு, நவ.29

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் நிச்சயமாக இணையும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலதுசாரி சக்திகளின் இணைவை யாராலும் சீர்குலைக்க முடியாது. எதிர்வரும் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்தே போட்டியிடும்.

இரண்டு கட்சிகளும் டி.எஸ். சேனநாயக்கவின் கொள்கைகளைப் பின்பற்றி, மத்திய பாதையில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும்.

புதிய தலைமுறை வாக்காளர்கள் ஊழலற்ற, அனுபவமுள்ள குழுவை எதிர்பார்க்கிறார்கள். அந்த தலைமை ஐக்கிய மக்கள் சக்தியை முதன்மையாகக் கொண்டது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதை விட, அரசாங்கத்தின் மீது கடும் அழுத்தத்தைப் பிரயோகித்து, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கம்.

நாட்டில் நெருக்கடிகளை உருவாக்கி அதிகாரத்திற்கு வரும் ஆசை ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லை. ஜனவரி மாதம் முதல் அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்-என்றார்.(அ)

# மாரடைப்பால் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனையில் சேர்த்த கடற்படை

யாழ்ப்பாணம், நவ. 29

புங்குடுதீவில் கனமழையால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் மாரடைப்பால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரை கடற்படையினர் மீட்டு, மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

வேலணை பிரதேச செயலகம் வழங்கிய தகவலுக்கு அமைவாகவே கடற்படையினரின் அம்புலன்ஸ் மூலம் பெண் மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட பெண் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ)

## 122 வீதிகள் மூடப்பட்டுள்ளன


கொழும்பு, நவ. 29

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான 122 வீதிகள் இதுவரை மூடப்பட்டுள்ளன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சகல மாவட்டங்களிலும் பிரதான நகரங்களுக்கு செல்லும் முக்கிய வீதிகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான திட்டங்களை செயல்படுத்த உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள், நகர மற்றும் மாவட்ட பகுதிகளுக்கு அணுகல் வழிகளை பாதுகாப்பாக மற்றும் சீராகச் செயல்பட செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதாகவும், பொதுமக்கள் மற்றும் வாகன சேவை இடையேயான சிக்கல்களை குறைக்க உதவும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் - 29 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - கார்த்திகை 13
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : நவமி




**மேடம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். பிள்ளைகளிடம் கோபத்தை காட்டாதீர்கள். முக்கிய விடயங்களில் அலட்சியம் வேண்டாம்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள்.

**கன்னி**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறை வேற்றுவீர்கள். அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நட்பு வட்டம் விரியும்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

# யாழில் அனர்த்தங்களால் 746 பேர் பாதிப்பு: 18 வீடுகள் சேதம், தடுப்பணை கதவு திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணம் மாவட்டத்தினுடைய அனர்த்த நிலவரம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அறிக்கை வெளியிட்டுள்ளார். இதன்படி வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 231 குடும்பங்களைச் சேர்ந்த 746 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களில் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 அங்கத்தவர்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. இதேவேளை கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் யாழ்ப்பாணத் மாவட்டத்தில் 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இதேவேளை அரியாலை உவர் நீர் தடுப்பணையில் 30 கத வுகளும் தொண்டைமானாறு உவர்நீர் தடுப்பணையின் 10 கதவுகளும் அராலி உவர் நீர் தடுப்பணையில் முழுமையாக 10 கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதுடன் தேவைக்கேற்ற வகையில் கதவுகள் திறப்பதற்குரிய தயார்நிலையில் நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


இதேவேளை நெடுந்தீவு பிரதேசத்தில் மாவலித்துறை வீதி பொதுப்போக்குவரத்து மேற்கொள்ள முடியாதவாறு முழுமையாக பாதிப்படைந்துள் ளதாகவும் நேற்று முன்தினம் அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையத்தால் விடுவிக்கப் பட்ட 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலிருந்து அவசர வெள்ள தணிப்பு நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலாளர்களின் கோரிக்கைக்கு இணங்க அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ)

# பாவற்குளத்தின் நான்கு வான்கதவுகள் திறப்பு மக்களை அவதானமாக இருக்க கோரிக்கை

வவுனியா, நவ. 29

வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதனால் அதன் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.



வவுனியாவில் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை தாண்டி 20.3 அடியை அடைந்துள்ளதால், அதன் நான்கு வான் கதவுகளும் 2 அடிக்கு திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவ குளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

அத்துடன், நெளுக்குளம் - நேரியகுளம் வீதி ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (எ-10)

# 16 விவசாயிகள் படகுகள் மூலம் மீட்பு

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர்பிரிவில் உள்ள கொக்குளாய், கருநாட்டுக் கேணி மற்றும் கொக்குத்தொ டுவாய் பிரதேசத்தில் வெள்ளத் தில் அகப்பட்ட 16 விவசாயி கள் படகுகள் மூலம் மீட்கப் பட்டனர்.

இப் பகுதியில் வேலைக்குச் சென்ற விவசாயிகள் நெல் வயல்களுக்கு இரவு கண்காணிப்புப் பணிக்காக தங்கியிருந்தனர். இதன்போது திடீர் வெள்ளப் பெருக்கு காரணமாக, அவர்களால் திரும்பி வர முடியாத நிலை ஏற்பட்டது.

இவ் விடயம் கிராம மீனவர்கள் மற்றும் கொக்குத் தொடுவாய் சமூக சேவைமைய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் 02.30 மணியளவில் அனைவரும் படகுகள் மூலம் பாதுகாப்பாக மீட்கப் பட்டனர். (எ)

# திக்கம் நாச்சிமார் கோவிலடி வெள்ள வாய்க்கால் அடைப்பு

## கொட்டும் மழையிலும் சீரமைப்பு பணி

பருத்தித்துறை, நவ. 29

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திக்கம் நாச்சிமார் கோவிலடி வீதியின் வெள்ள வாய்க்காலில் மழை காரணமாக அடித்துச் செல்லப்பட்ட மரக்குற்றிகள் மற்றும் வாழைத்தண்டுகள் உட்பட்ட கழிவுகளால் வெள்ளம் வழிந்தோடும் மதகுகள் அடைபட்டிருந்தன. இந்த நிலையில் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் குறித்த மதகு மற்றும் வடிகால் என்பன கொட்டும் மழையிலும் களப்பணி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினரால் நேற்றுக்காலை சீர்செய்யப்பட்டது. இதன்போது, பிரதேச செயலாளர் ரமேஸ்கரன் நேரடியாக வடிகாலில் இறங்கி சீர் செய்யும் பணியில் ஈடுபட்டார்.

குறித்த பகுதியில் வெள்ளம் வழிந்தோடும் பிரதான வடிகாலாக குறித்த நாச்சிமார் கோவிலடி வெள்ள வாய்க்கால் காணப்படுகிறது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் மோசமான வானிலை தொடர வாய்ப்பு!

## வளிமண்டல திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 29

டிட்வா புயல் மேலும் தீவிரமடைந்துள்ள நிலையில், நாடு முழுவதும் மோசமான வானிலையியல் சூழ்நிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அவசர சிவப்பு எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் அதிகபட்ச மழை மற்றும் பலத்த காற்று வீசும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

நாட்டின் சில மாகாணங்களில் 200 மில்லி மீற்றரை மீறும் மிக கன மழை பெய்யும் எனவும் மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோமீற்றருக்கு இடைப்பட்ட வேகத்தில் பலத்த காற்றும் சில மாகாணங்களில் மணிக்கு 80 முதல் 90 கிலோமீற்றர் வேகத்தில் காற்றடிக்கும் அபாயம் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல இடங்களில் உயர் அபாய நிலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி திடீர் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, மரங்கள் சாய்வது வீழ்வது, கடல் பகுதிகளில் மிகவும் கடுமையான அலை பதிவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அதிகபட்சமாக வவுனியா, செட்டிகுளத்தில் 315 மில்லி மீற்றர் மழையும், முல்லைத்தீவு, அளம்பிலில் - 305 மில்லி மீற்றர் மழையும், கண்டியில் 223.9 மில்லி மீற்றர் மழையும், மன்னார், மடுவில் 218.5 மில்லி மீற்றர் மழையும், இரத்தினபுரியில் 208 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளது.

இதேவேளை அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அதிகாரிகள் வழங்கும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும், வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்படும் பகுதிகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(அ)

# கொழும்பு - கண்டி வீதியில் போக்குவரத்து முற்றாக தடை

கொழும்பு, நவ. 29

கொழும்பு - கண்டி வீதியில் நேற்று முன் தினம் இரவு பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளமையினால் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு - கண்டி வீதியில் கேகாலை, மீபிட்டிய பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்படுவதற்கான அபாயம் காணப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் கொழும்பு - கண்டி வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எனவே, கொழும்பு - கண்டி வீதியை பயன்படுத்தும் சாரதிகள் கேகாலை பகுதி ஊடான மாற்று வழிகளை பயன்படுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

(அ)

# தென்னை மரத்தில் இருந்தவரை மீட்டனர் விமானப்படையினர்!

கொழும்பு, நவ. 29

அனுராதபுரத்தில் உள்ள கலா ஓயா பெருக்கெடுத்ததால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக நேற்று முதல் தென்னை மரத்தில் சிக்கிக் கொண்ட ஒருவர் விமானப் படை உலங்கு வானூர்தி மூலம் மீட்கப்பட்டார்.

இதேவேளை பொலனறுவையில் உள்ள மனம்பிட்டிய பாலத்தில் தவித்த 06 பேரும் நேற்று காலை ஹிங்குராங்கொட முகாமின் எண் 7 உலங்கு வானூர்தி படைப்பிரிவைச் சேர்ந்தஉலங்கு வானூர்தி மூலம் பாதுகாப்பாக மீட்டு பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

(அ)

# சகல பொலிஸாரினதும் விடுமுறைகளும் ரத்து!

கொழும்பு, நவ. 29

நாட்டைப் பாதித்துள்ள மோசமான வானிலை காரணமாக அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறைகள் மற்றும் நாள் விடுப்புகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எவ். யூ. வுட்லர் தெரிவித்தார்.

தற்போதைய அனர்த்த நிலைமை காரணமாக, ஒரு அதிகாரி தான் நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்துக்குச் சேவைக்குச் சமூகமளிக்க முடியாவிட்டால், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் சேவைக்குச் சமூகமளிக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அவசர அனர்த்த நிலைமைகளுக்காக 117, 119 என்ற அவசர அழைப்பு இலக்கங்கள், 1990 என்ற சுவசரிய சேவை, 110 என்ற தீயணைப்புப் பிரிவு, 113 என்ற இராணுவத் தலைமையகம், 116 என்ற விமானப்படைத் தலைமையகம் ஆகிய விளக்கங்களுக்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# புறக்கோட்டை மிதக்கும் சந்தை வளாகம் ஜப்பான் முதலீட்டாளருக்கு குத்தகைக்கு!

கொழும்பு, நவ. 29

கொழும்பில் உள்ள புறக்கோட்டை மிதக்கும் சந்தை வளாகத்தை ஜப்பானிய முதலீட்டாளர் ஒருவருக்கு 160 மில்லியன் அமெரிக்க டொலருக்கு குத்தகைக்கு வழங்க நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதலீட்டாளர், தற்போதைய நிலையில் குத்தகைக்கு விடப்படும் வளாகத்தில் உள்ள வியாபார தளங்கள் மற்றும் இரவு சந்தையை நவீனமயமாக்கத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி அங்குள்ள வியாபார தளங்களின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குவது குறித்து தற்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மிதக்கும் சந்தை வளாகம், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தால் 2014 ஆம் ஆண்டு 344 மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்டது.

ஆறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த வளாகத்தில் 92 வியாபாரத் தளங்கள் உள்ளன.

(அ)

# அனர்த்த நிவாரண பணிகளுக்காக 1.2 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, நவ. 29

இலங்கையின் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்காக இதுவரை 1.2 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், 2025 ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்ட நிதியொதுக்கீட்டில், மேலும் 30 பில்லியன் ரூபா அவசர தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே. பண்டார தெரிவித்தார்.

தேவையான அளவிற்கு நிதியை கோருமாறு அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் தற்போது நடைபெறும் நிகழ்நிலை கலந்துரையாடலின் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

எந்தவொரு தடையும் இன்றி செயல் திறனுடன் அனர்த்த நிவாரண பணிகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியினால் அனைத்து தரப்பினருக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ)

# அனைத்து ரயில் சேவைகளும் இரத்து!

கொழும்பு, நவ. 29

நாடு முழுவதும் நிலவும் கடுமையான வானிலை காரணமாக, நேற்றுக் காலை 6 மணி முதல் அனைத்து வழித்தடங்களிலும் உள்ள அனைத்து ரயில் சேவைகளையும் ரயில்வே திணைக்களத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் மண்சரிவு, பாறைகள் உருண்டு விழுதல், வெள்ளம் மற்றும் பல ரயில் பாதைகளில் மரங்கள் விழும் அபாயம் அதிகரித்து வருகின்றது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களனி கங்கை தாழ்நிலப்பகுதிகளுக்கு பாரிய வெள்ள அபாய எச்சரிக்கை!

நுவரெலியா, நவ. 29

களனி கங்கை ஆற்றுப்படுகையின் தாழ்நிலப் பகுதிகளுக்கு பாரிய வெள்ள நிலைமை ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் எஹெலியகொட, நோர்வூட், யட்டியாந்தோட்டை, கலிகமுவ, ருவன்வெல்ல, புலத்கொஹூபிட்டிய, தெஹியோவிட்ட, சீதாவக்க, தொம்பே, பாதுக்கை, ஹோமாகம, கடுவலை, பியகம, கொலன்னாவ, களனி, வத்தளை மற்றும் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட களனி கங்கை ஆற்றுப்படுகையின் தாழ்நிலப் பகுதிகளில் இந்த பாரிய வெள்ள நிலைமை ஏற்படக்கூடும் என்று நேற்று அதிகாலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களனி கங்கை ஆற்றுப்படுகையின் நீரேந்துப் பகுதிகளில் பல இடங்களில் தற்போது அதிக மழை பெய்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மழை நிலைமை, களனி கங்கையின் மேல் ஆற்றுப்படுகையில் அமைந்துள்ள நீர்த்தேக்கங்களிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் களனி கங்கை ஆற்றுப்படுகைக்குள் பராமரிக்கப்படும் ஆற்று நீர் அளவீடு களின் நீர் மட்டங்களை பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் இந்த எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிலைமையால் உயிர்கள் மற்றும் உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ள மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறு அப்பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களிடமும், அப்பிரதேசங்கள் ஊடாக பயணிக்கும் சாரதிகள் மற்றும் பயணிகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ)

# நாட்டில் ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை

## பதுளை, நுவரெலியா அபாய கட்டத்தில்

கொழும்பு, நவ. 29

நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய வானிலையால் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள், மண்சரிவுக்கு முந்தைய ஆபத்து அறிகுறிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

நேற்று அதிகாலை 02. 00 மணி முதல் இன்று பிற்பகல் 02.00 மணி வரையான 24 மணி நேர காலப்பகுதிக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையின் மூன்றாம் மட்டத்தை (சிவப்பு) வெளியிட்டுள்ள குறித்த நிறுவனம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதன்படி, பின்வரும் மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலக பிரிவுகளுக்கு இந்த முன்னெச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:

பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல, கந்தகெட்டிய, பசறை, மீகஹகிவுல, ஊவ பரணகம, வெலிமடை, லுணுகல, எல்ல, பண்டாரவளை, சொரணாதோட்டம்.

கண்டி மாவட்டத்தில் உடுபலாத்த, கங்காவட்ட கோரளே, உடுதும்பர, தொழுவ, மினிப்பே, பாத்ததும்பர, தெல்தோட்ட, அக்குரணை, கங்காஇஹல கோரளே, பாத்ததும்பர, யட்டிநுவர, தும்பனே, உடுநுவர, ஹாரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, பஸ்பாகே கோரளே, பன்விலை, ஹதரலியத்த, குண்டசாலை, கேகாலை மாவட்டத்தில் மாவனெல்லை, ரம்புக்கணை, அரநாயக்க, புளத்கொஹூபிட்டிய, களிகமுவ, தெஹியோவிட்ட.

குருநாகல் மாவட்டத்தில் ரிதிகம, மாவத்தகம, மல்லவபிட்டிய. மாத்தளை மாவட்டத்தில் நாவுல,ரத்தோட்ட, அம்பன்கங்கை கோரளே, உக்குவெல, வில்கமுவ, யட்டவத்த,மாத்தளை, பலலேபொல, லக்கல, பல்கேம.

மொனராகலை மாவட்டத்தில் பிபில,மெதகம.நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை, ஹங்குராங்கெத்த, நில்தண்டஹின்ன,மத்துரட்ட, நுவரெலியா, கொத்மலை மேற்கு,கொத்மலை கிழக்கு, அம்பகமுவ, தலவாக்கலை, நோர்வுட் ஆகிய பிரதேசங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ)

# காசல்ரீ நீர்த்தேக்கம் நேற்று முழுக்கொள்ளவை எட்டியது

## மக்களுக்கு எச்சரிக்கை

நுவரெலியா, நவ. 29

களனி ஆற்றின் பிரதான கிளையாறான கெசல்கமுவ ஓயாவில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது நீர்த்தேக்கமான காசல்ரீ நீர்த்தேக்கம் அதன் முழுக் கொள்ளளவையும் எட்டியுள்ள நிலையில் அதன் தானியங்கி வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேறி வருகின்றது.

நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள 14 தானியங்கி வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிரானது களனி ஆற்றின் நீர் மட்டத்தை வெகுவாக அதிகரிக்கும் என்பதால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கீழ் பகுதியில் களனி ஆற்றின் கரையில் குடியிருப்பவர்களும் இந்த ஆற்றினை பயன்படுத்துபவர்களும் மிகவும் அவதானமாக செயல்பட வேண்டும் என நீர் தேக்கத்தின் கடமை நேர பொறியியலாளர் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் தொடர்ந்தும் மழைபெய்து வருவதனால் காசல்ரீ நீர் தேக்கத்துக்கு அதிகளவான நீர் விநியோகிக்கப்படுவதால் இந்த தானியங்கி வான் கதவுகள் அவ்வப்போது திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், மவுஸ்ஸாகலை நீர்த்தேக்கமும் நீர் நிரம்பி வெளியேறும் நிலையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(எ)

# வீட்டுக்குள் வெள்ளம் புகுந்தது

கிண்ணியா, நவ. 29

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழை காரணமாக கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலைச்சேனை, ஆலிம் வீதி முதலான பகுதிகளில் சுமார் 25இற்கும் மேற்பட்ட வீடுகள் மழை வெள்ளம் காரணமாக நீரில் மூழ்கிக் காணப் படுகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் உற வினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

வீட்டுக்குள் வெள்ளம் புகுந் துள்ள அதேவேளை தாழ் நிலப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

தாழ் நிலப்பகுதிகளிலும், வீதிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்பதனால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

(எ)

# திருகோணமலை மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ கூட்டம்

திருகோணமலை, நவ. 29

திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ விசேட கூட்டம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாசன் சுகுணதாஸ் மற்றும் அரச உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அசாதாரணமான சூழலில் எடுக்கப்பட வேண்டிய முன்னாயத்தங்கள் மற்றும் வெள்ள நீர் நிரம்பக்கூடிய இடங்களில் இருந்து பொது மக்களை பாதுகாப்பாக வெளியேற்ற எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப் பட்டது.

(எ)

# அனர்த்த முகாமைத்துவம் பற்றி கல்முனையில் கலந்துரையாடல்

கல்முனை, நவ. 29

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்தங்களை எதிர்கொள்வது குறித்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் ஆராயும் விசேட அவசர கூட்டம் கல்முனை பள்ளிவாசல் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது, அனர்த்த அபாயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான உடனடி பதிலிறுப்பு நடவடிக்கைகள் குறித்து திட்டமிடப்பட்டன.

கடல் சீற்றம் மற்றும் வெள்ளம் ஏற்படும் அபாயகரமான இடங்களை வேடிக்கை பார்ப்பதற்காகப் பொதுமக்கள் கூடுவதைத் தவிர்த்தல் மற்றும் அவர்களைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரியிடம் விசேட வேண்டுகோள் விடுக் கப்பட்டது. இதற்குத் தேவை யான முழுமையான ஒத்து ழைப்பை வழங்குவதாக பொலிஸ் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.


அனர்த்தக் காலங்களில் மேலதிக பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை பிரதேச செயலகத்துடன் இணைந்து ஒருங்கிணைந்த முறையில் முன்னெடுப்பது குறித்தும் இணக்கம் காணப்பட்டது.

(எ-01)

# மண்சரிவால் நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதி போக்குவரத்து பாதிப்பு

ஹற்றன், நவ. 29

மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் ஹற்றன் குடாகம மற்றும் கொட்டக்கலை பகுதிகளில் பல இடங்களில் பாரிய அளவிலான மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதன் விளைவாக இந்த முக்கிய பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்து நேற்று அதிகாலை முதல் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.



பிரதேசத்தில் பெய்து வரும் இடைவிடாத மழை காரணமாக மண்மேடுகள், கற்கள், மரக்கிளைகள் உள்ளிட்டவை பிரதான வீதிக்கு சரிந்து விழுந்துள்ளன. இதனால் வீதி முழுவதும் மண் மற்றும் கற்கள் குவிந்துள்ள நிலையில், போக்குவரத்தை சீராக செயல்படுத்த முடியாத சூழல் உருவாகியுள்ளது.

மண் சரிவுகளை அகற்றும் பணிகள் அவசரகாலத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வந்தாலும், மழை மேலும் அதிகரித்து வருவதால் இந்தப் பணிகளை எதிர்பார்த்த அளவில் முன்னேற முடியாமல் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொலிஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் இணைந்து நிலைமையை கண்காணித்து வருகின்றனர். மழை குறையும் வரை பொது மக்கள் மற்றும் சாரதிகள் மாற்று வீதிகளை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(எ)

# மாத்தளையில் 540 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி

மாத்தளை, நவ. 29

நேற்றுக்காலை 06. 00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் அதிகபட்ச மழை வீழ்ச்சி மாத்தளை மாவட்டத்தில் உள்ள கம்மடுவயில் பதிவாகியுள்ளது. இதன் அளவு 540 மில்லி மீற்றராகும்.

அதிக மழைவீழ்ச்சி பதிவான ஏனைய பிரதேசங்கள் பின்வருமாறு:

நுவரெலியா - கொத்மலை : 421 மில்லி மீற்றர்,

கண்டி மாரஸ்ஸன : 403 மில்லி மீற்றர்,

கண்டி - மொறஹேன : 394 மில்லி மீற்றர்,

நுவரெலியா - வட்டவளை : 316 மில்லி மீற்றர்,

பதுளை - ஹாலிஎல : 232 மில்லி மீற்றர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டித்வா...

நகருகிறது.

டித்வா புயலின் மையப்பகுதி இன்று சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளத்துக்கு அண்மையாக கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புயலின் நகர்வு வேகம் குறைவாக உள்ளமையால் கரையைக் கடக்கும் நேரமும் தாமதமாகும். இதனால் இன்றும் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு அவ்வப்போது மிதமானது முதல் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களுக்கு தற்போது கிடைத்து வரும் மழை நீடிக்கும் வாய்ப்புள்ளது. காற்றின் வேகமும் வடக்கு மாகாணத்தில் படிப்படியாக அதிகரிக்கும்.

ஆகவே, வடக்கு மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு வேண்டப்படுகிறார்கள். குறிப்பாக தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் மிகுந்த அவதானமாக இருப்பது அவசியம். வெள்ளநீர் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தை உணர்ந்தால் முன்கூட்டியே உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு செல்வது சிறந்தது.

இதேவேளை வடக்கு மாகாணத்தின் கரையோர பகுதிகள் குறிப்பாக வடக்கு மாகாணத்தின் மேற்கு கரையோரப்பகுதிகள் மற்றும் தீவுப்பகுதிகளில் கடல்நீர் குடியிருப்புக்களுக்குள் உட்புகுதல் செயல்பாடு இடம் பெறும். ஆகவே, கரையோர பகுதி மக்கள் இது தொடர்பாகவும் அவதானமாக இருப்பது அவசியம்", என்றும் குறிப்பிட் டார். (ஐ)

## சீரற்ற...

காணப்படுகிறது. இதேநேரம், அரச கட்டமைப்பு, படை தரப்பு என்பன மக்களை மீட்கும் பணியில் ஈடுபடவில்லை என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

வட்டுவாகல் பாலம் ஊடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது. கிளிநொச்சியிலிருந்து - புதுக்குடியிருப்பு வரை பேருந்து சேவை நடைபெறுகிறது. ஏ-35 வீதியில் மாணிக்கப்பிள்ளையார் கோவிலடி, மூங்கிலாறு, கைவேலி மஞ்சள் பாலம் பகுதிகள் வீதியை மூடி வெள்ளம் பாய்வதால் பேருந்துகள் போன்ற வாகனங்கள் மட்டுமே பயணிக்கின்றன.

இதனிடையே, இருட்டுமடு, குரவில், ஆனந்தபுரம், மந்துவில், புதுக்குடியிருப்பு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புதுக்குடியிருப்பு - கேப்பாபிலவு வீதி கள்ளியடியுடன் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பாதைகளும் போக்குவரத்து தடைப்பட்டுள்ளன. இதேபோன்று, முள்ளியவளை - மாங்குளம், தண்ணீரூற்று - நெடுங்கேணி பகுதிகளுக்கான வீதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

அம்பலவன்பொக்கணை, மாத்தளன் பகுதி மக்கள் வெள்ளத்தில் சிக்கிய நிலையில் இரணைப்பாலையை சேர்ந்த மக்களால் படகுகள் மூலம் மீட்கப்பட்டனர். இதேசமயம் பல இடங்களிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளமையால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது.

**வவுனியாவில்...**

வவுனியாவில் தொடரும் அடைமழையால் பல இடங்களிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. அத்துடன், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், மதத் தலங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. கந்தசாமி நகர், பழைய மெனிக்பாம், கோதண்டர்நொச்சிக்குளம், பூம்புகார் ஆகிய இடங்களில் வெள்ளத்தில் அகப்பட்ட பல குடும பங்கள் வெளியேற முடியாத நிலையில் காணப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தின் பெரிய குளங்கள் உட்பட பல குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளன. செட்டி குளம் உடைப்பெடுத்துள்ளது.

**மன்னாரில்...**

கடும் மழையால் மன்னார் நகரத்துடனான போக்குவரத்து பிரதான பாலத்துடன் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பல கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தொடர்ந்து பெய்துவரும் மழையால் மல்வத்து ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் வெள்ளம் மேலும் அதிகரிக்கும் என்றும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு எச்சரித்துளளது. மடு, நானாட்டான், முசலி பிரதேச செயலர் பிரிவுகளை சேர்ந்த மக்களை விழிப்புடன் இருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

காற்றின் வேகம் அதிகரித்திருப்பதால் கரையோர கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். விடத்தல் தீவு, தேவன்பிட்டி, அந்தோனியார்புரம் கிராமங்களில் கடல்நீரும் உட்புகுந்துள்ளது.

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 297 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 140 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகவும் 85 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. அத்துடன், 32 குடும்பங்களை சேர்ந்த 106 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

**கிளிநொச்சியில்...**

தொடர் மழையால் இரணைமடுக்குளத்தின் வால் கட்டு வெட்டிப்பட்டு நீர் வெளியேற்றப்பட்டுள்ளது. 36 அடி கொள்ளளவு கொண்ட இந்தக் குளம் 36 அடியை எட்டியுள்ளது. இதனால், இராமநாதபுரம், வட்டக்கச்சி, மாயவனூர் பகுதிகளின் மக்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. பல தாழ்நிலங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

**கிழக்கில்...**

கிழக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் மழை குறைவடைந்துள்ளது. எனினும், வெள்ளப்பாதிப்பு இன்னமும் முற்றாக நீங்கவில்லை. இதனிடையே, திருகோணமலை மாவட்டத்தில் அடுத்த 36 மணி நேரத்துக்கு 150 மி.மீற்றர் வரையான மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

**தென்னிலங்கையில்....**

தென்னிலங்கையில் தொடரும் மழைக் காலநிலையால் தென்னிலங்கையின் 91 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஆறுகளை அண்டியுள்ள பல பகுதிகளுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மொனராகலை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களுக்கே நிலச்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், களனி கங்கை பெருக்கெடுத்துள்ளமையால் கொழும்பு, வத்தளை பகுதிகளில் வெள்ளம் வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால், அபாய எச்சரிக்கை வலயத்திலுள்ளவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர அறிவுறுத்தப்பட்டது. இதேபோன்று கம்பஹாவின் அத்தனகல்லாறு பெருக்கெடுத்துள்ளது.

இதனிடையே, இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, எலபாத்த,பெல்மதுளை, காவத்தை, எஹேலியகொடை, காவத்தை,கிரியெல்ல குருவிட்ட உள்ளிட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளனர். களு கங்கையின் நீர் மட்டம் 24 அடிக்கு மேல் உயர்ந்துள்ளது. இதனால், இரத்தினபுரி நகரின் பெரும்பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அத்துடன், அங்குள்ள சிவாலயமும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

## அத்தியாவசிய...

மருத்துவமனைகள் - முதியோர் இல்லங்கள் - மருந்தகங்கள் பிற ஒத்த நிறுவனங்கள் உணவு, சிகிச்சை தொடர்பான சேவைகள், பயணிகள் - பொருட்களை கொண்டு செல்லும் பொது போக்குவரத்து, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புடன் தொடர்புடைய சேவைகள்.

நெடுஞ்சாலைகள், பாலங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், ரயில் பாதைகள் தொடர்புடைய சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கல் - பாதுகாப்பு - விநியோகம் தொடர்பான சேவைகள், மாவட்ட செயலகங்கள் - பிரதேச செயலகங்கள் - கிராம அலுவலரகள் - சமுர்த்தி மேம்பாட்டு அதிகாரிகள் - கமநல திணைக்கள உதவியாளர்கள் உள்ளிட்ட சேவைகள், அம்புலன்ஸ் சேவைகள், மத்திய வங்கி மற்றும் வங்கி கிளைகள் - காப்பீட்டு சேவைகள்,

தீயணைப்பு மற்றும் உயிர் காப்பு சேவை, நீர்ப்பாசனத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து சேவைகள், தொலைத்தொடர்புடன் தொடர்பான சகல செவைகளும், விவசாயம் - விவசாய காப்பீட்டுடன் இணைக்கப்பட்ட சகல சேவைகளும் தாழ்நில பிரதேச மேம்பாடு தொடர்பான சகல சேவைகளுமே இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## பிரதேச...

அனுப்பி வைத்துள்ளார்.

இதன்படி, நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விரைவாக நிவாரணம் வழங்க உரிய பொருட்கள், செயல்பாடுகள், ஆலோசனையற்ற சேவைகளுக்கு வரையறையான 5 கோடி ரூபாய் வரையான பெறுகை நடவடிக்கைகளை எவ்வித தடைகளுமின்றி விரைவாக மேற்கொள்ள முடியும். பிரதேச செயலாளர் 5 கோடி ரூபாய் வரையில் செலவழிக்கக்கூடிய வகையில் நிதி தத்துவங்களை வழங்குவதற்கு மாவட்ட செயலாளர் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு மேலதிகமாக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு மேலும் செலவழிக்க வேண்டுமாயின், அது குறித்த விவரங்களை மாவட்ட செயலாளர் பாதுகாப்பு அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு விரைவாக அறிவிக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## புலம்பெயர்ந்த...

நிதி உதவிகளை வைப்புச் செய்வதற்கான வங்கிக் கணக்கு இலங்கையிலுள்ள வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

உதவித் தொகையை இலங்கை ரூபாயிலும் அமெரிக்க டொலரிலும் வைப்புச்செய்யலாம். இதற்காக இரண்டு கணக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உயர்தர...

என்று அறிவித்துள்ள அவர், பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் புதிய திகதி அறிவிக்கப்படும் வரை அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

## பாடசாலை...

அமைச்சின் செயலாளர் நாலக்க களுவெவ அறிவித்துள்ளார்.

முன்னதாக, டிசெம்பர் 8ஆம் திகதி மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக பாடசாலைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஏ-9...

ஏற்பட்ட வெள்ளத்தால் நொச்சிமோட்டை பாலத்தை மேவி 3 அடிக்கு மேலாக வெள்ளம் வேகமாக பாய்கிறது. இதனால், வாகனங்கள் தொடர்ந்து பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதனால், வடக்கிலிருந்து தெற்குக்கும் தெற்கிலிருந்து வடக்குக்கும் மக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது. இதனால், பல நூற்றுக்கணக்கான வாகனங்கள் வீதியின் இரு பக்கங்களிலும் தரித்து நிற்கின்றன. அத்துடன், பொதுமக்கள் பலரும் சிரமங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, ஏ-9 வீதி வழியான போக்குவரத்தை தடைசெய்து தாண்டிக்குளம், பறநாட்டாங்கல் சந்தி ஆகிய பகுதிகளில் பொலிஸார் வீதி தடைகளை ஏற்படுத்தியுளளனர். (ஐ)

## வல்வெட்டித்துறை...

தலைவராக அவர் தெரிவாகியுள்ளார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் 16 உறுப்பினர்களை கொண்ட வல்வெட்டித்துறை நகர சபைக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் 7, இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் 5, தேசிய மக்கள் சக்தி சார்பில் மூவர், ஈ. பி. டி. பி. சார்பில் ஒருவர் தெரிவாகினர்.

நேற்றைய தினம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சா.சுதர்சன் தலைமையில் நடந்த நகர பிதா தெரிவில் சிவாஜிலிங்கத்துக்கு 7 உறுப்பினர்களின் ஆதரவும் அவரை எதிர்த்த தமிழ் அரசு கட்சியின் ம. மயூரனுக்கு 6 உறுப்பினர்களின் ஆதரவும் கிடைத்தன. தேசிய மக்கள் சக்தி நடுநிலைமை வகித்தது. (ஐ)

## இயற்கை...

காணாமல் போயுள்ளனர் என்று மாவட்ட செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

**கேகாலையில்...**

கேகாலை மாவட்டத்தின் புலத்கொஹூபிட்டி - தேதுகலை பகுதியில் மண்சரிவில் சிக்கி 12 பேர் காணாமல் போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், அனர்த்த முகாமைத்துவ பிரிவு நேற்று மாலை 6 மணிக்கு வெளியிட்ட அறிவிப்பின்படி, பேரிடரால் 69 பேர் உயிரிழந்தனர். 34 பேர் காணாமல் போயுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் 4 இறப்புகளே பதிவாகியுள்ளன என்றும் 19 பேர் காணாமல் போயினர் என்றும் அது கூறியுள்ளது. அத்துடன், பதுளையில் 30 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், கடந்த 16ஆம் திகதி முதல் நேற்று மாலை வரையான காலப்பகுதியில் இயற்கை அனர்த்தங்களால் 63 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 19 ஆயிரத்து 286 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## வவுனியாவில்...

வெள்ளம் இழுத்துச் செல்வதைக் கண்ட கிராம மக்கள் அது குறித்து பொலிஸ், இராணுவத்துக்கு தகவல் அளித்தனர்.இதையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த இராணுவத் தினரும் பொலிஸாரும் கிராமத்தின் இளைஞர்களுடன் இணைந்து காரை மீட்டனர்.

காருக்குள் பயணித்த ஆணும் பெண்ணும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர். இருவரின் சடலங்களும் உடல்கூராய்வுக்காக வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை குறித்த வீதியானது சீரற்ற காலநிலையால் நேற்றுமுன்தினம் இரவு முதல் மூடப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தொலைபேசி...

வெள்ளம், மின் தடை, கடும் காற்றுடனான மழை காரணமாகவே இந்தத் தடை ஏற்பட்டதாக தொலைபேசி, இணைய சேவையை வழங்கும் நிறுவனங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 6 பிரதான ஆறுகளில் அபாயகர வெள்ள நிலை!

கொழும்பு, நவ. 29

நீரேந்து பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக, இலங்கையின் ஆறு முக்கிய ஆறுகளின் தாழ்நிலப் பகுதிகளில் "அபாயகர வெள்ள நிலைமை" உருவாகியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மகாவலி கங்கை, தெதுரு ஓயா, மஹா ஓயா, கலா ஓயா, மாணிக்க கங்கை மற்றும் மல்வத்து ஓயா ஆகிய ஆறுகளின் நீர்மட்டம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இந்த ஆறுகளுக்கு அண்மையில் வசிக்கும் பொது மக்கள், தற்போது நிலவும் அதி தீவிர வெள்ள நிலைமையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள மிகவும் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, இந்த ஆறுகளின் இரு மருங்கிலும் உள்ள தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தாமதமின்றி, உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கடுமையாக அறிவுறுத்தியுள்ளது. (அ)

## இரத்தினபுரி, களுத்துறைக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!

கொழும்பு, நவ. 29

அதிக மழைப்பொழிவு மற்றும் நீர்மட்டம் உயர்வதால் களு கங்கை படுக்கையின் தாழ்வான பகுதிகளில் அடுத்த சில மணி நேரங்களுக்குள் பெரும் வெள்ள அபாயம் ஏற்படும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

திணைக்களத்தின் தகவலின்படி, ஆபத்தில் உள்ள பகுதிகளில் பின்வருவன அடங்கும்:

இரத்தினபுரி மாவட்டம்: பெல்மதுல்ல, நிவித்திகலை, இரத்தினபுரி, குருவிட்டை, அயகம, எலபாத்தை

களுத்துறை மாவட்டம்: களுத்துறை, இங்கிரிய, ஹொரணை, தொடங்கொட, மில்லனிய, புலத்சிங்கள, பாலிந்தநுவர, மதுராவல, அகலவத்தை குறித்தப் பகுதிகளில் வசிப்பவர்களும், அங்குள்ள வீதிகளினூடாக பயணிப்பவர்களும் மிகுந்த விழிப்புடன் இருக்குமாறும் தேவைப்பட்டால் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் அதிகாரிகள் பிறப்பிக்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## கொழும்பில் வெள்ளம்: போக்குவரத்து பாதிப்பு



கொழும்பு, நவ. 29

கொழும்பில் சீரற்ற வானிலையால் பல வீதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும், மரங்கள் முறிந்து வீழ்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, குறித்த வீதிகளுக்கு பதிலாக மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், தற்போது தடைசெய்யப்பட்டுள்ள விதிகளாக,

பிரேமசிறி கேமதாச மாவத்தையில் உள்ள லயனல் தியேட்டர் அருகே மற்றும் கெப்பட்டிபொல மாவத்தை,

தேசிய வைத்தியசாலையில் 4ஆவது நுழைவாயில் அருகில் எல்விடிகல மாவத்தை, குயின் வீதி சந்தி,

கொட்டாஞ்சேனை கோவிலுக்கு அருகிலுள்ள ஆமர் பார்பர் சந்தி என்பன தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## அதிவேக நெடுஞ்சாலைகளில் கட்டணமின்றி பயணிக்க வசதி

கொழும்பு, நவ. 29

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களுக்கான கட்டணங்கள் அறவிடப்படாது என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கே.டபிள்யூ. கண்டம்பி தெரிவித்துள்ளார்.

இந்தச் சலுகையின் கீழ், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு வெளிவட்ட வீதி, கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்புப் பகுதி ஆகிய அனைத்துப் பாதைகளிலும் சீரற்ற காலநிலை சீரடையும் வரை வாகனங்கள் இலவசமாகப் பயணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இந்த வாய்ப்பு முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்துருளிகளுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடற்படையினர் நிவாரணம்

கொழும்பு, நவ. 29

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க கடற்படை தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தெற்கு, கிழக்கு, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களை உள்ளடக்கி அனர்த்த நிவாரணக் குழுக்கள் கடற்படையால் கடமையில் ஈடுத்தப்பட்டுள்ளன,இந்த நிவாரணக் குழுக்கள் தொடர்ந்து அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

அதன்படி, கடற்படை அனர்த்த நிவாரணக் குழுக்கள், அனர்த்த முகாமைத்துவ மையத்துடன் இணைந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் உட்பட 911 பேரைப் பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுத்தது.

கூடுதலாக, பலத்த காற்றினால் விழுந்த மரங்களை அகற்றுதல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பது மற்றும் சிறிய படகுகள் மூலம் மக்களின் அன்றாட தேவைகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை கடற்படை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தேவைக்கேற்ப கடமையில் ஈடுபடுத்த ஒவ்வொரு கடற்படை கட்டளையிலும் மேலதிக அனர்த்த நிவாரண குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.(அ)

## 2016 இற்கு பின் மிகமோசமான வானிலை

கொழும்பு, நவ. 29

வளிமண்டலவியல் திணைக்களத்தின் வெளியீட்டின்படி, தற்போது நாட்டில் நிலவி வரும் சீரற்ற வானிலை 2016ஆம் ஆண்டுக்கு பிறகு பதிவாகிய மிக மோசமான வானிலையென குறிப்பிடப்பட்டுள்ளது.

திணைக்களம் தெரிவித்துள்ள தகவலின் படி, கடுமையான கனமழை, இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் வெள்ளம் பல பகுதிகளில் தொடர்ந்து பதிவாகி வருகிறது. இதனால் வீடுகள் சேதமடைதல், மண்சரிவு, வெள்ளப்பெருக்கு மற்றும் வீதிகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளன என் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## பஸ் நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 29

அதிதீவிரமான வானிலை காரணமாக, பொது பயணிகளுக்குச் சேவைகளை வழங்கும் பேருந்து நடத்துநர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, பேருந்து நடத்துநர்கள் பின்பற்ற வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பாதகமான வானிலை காரணமாகப் பேருந்துகள் இயக்கப்படும் போது, பொலிஸ் வீதி தடைகள் இருக்குமாயின், குறித்த இடத்தில் பணியில் உள்ள பொலிஸ் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் மூழ்கியுள்ள வீதிகளில் எந்தக் காரணத்துக்காகவும் பேருந்துகளைச் செலுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதகமான வானிலை காரணமாக, மாற்று வழிகளைப் பயன்படுத்தும்போது, பேருந்தில் பயணிக்கும் பயணிகளுக்கு அது குறித்துத் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ ஜனாதிபதி இராணுவத்துக்கு உத்தரவு

கொழும்பு, நவ. 29

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்கனவே 20,500 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மாத்திரம், இராணுவம் சுமார் 3,790 பேரை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

கண்டி, நுவரெலியா மற்றும் பதுளையில் ஏற்பட்ட கடும் வெள்ளம், மண்சரிவுகள் சவாலானதாக மாறியுள்ளபோதிலும், இராணுவம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. (அ)

# தெற்கு மக்களின் நம்பிக்கையைப் பெறவே ரில்வினுக்கு எதிரான லண்டன் ஆர்ப்பாட்டம்

### கூறுகின்றார் உதய கம்மன்பில



கொழும்பு, நவ. 29

தென் பகுதி மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை தோற்றுவிக்கும் வகையிலேயே ரில்வின் சில்வாவுக்கு எதிரான லண்டன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கலாம் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார் அவர் மேலும் தெரிவிக்கையில்-ரில்வின் சில்வாவுக்கு எதிராக லண்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமானது ஒரு சுமுகமான ஆர்ப்பாட்டமாகும்.

ரில்வின் சில்வாவுக்கு எதிராக புலிக்கொடிகள் ஏந்தி வந்தபோதும், எந்தவொரு கோரிக்கையையோ அல்லது கோஷத்தையோ அவர்கள் முன்வைக்கவில்லை. அவர் வாகனத்திலிருந்து இறங்கி விழா நடைபெறும் மண்டபத்துக்கு செல்வதைத் தடுக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

2012இல் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் நடந்த ஆர்ப்பாட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அன்றைய ஆர்ப்பாட்டக்காரர்கள் கோபத்து டன் வெறித்தனமாக இருந்தனர். மகிந்த ராஜபக்ஷவுக்கு மரணம் வேண்டும் என்று கோஷமிட்டனர்.அன்றைய தினம் அவர் மேலும் பத்து நிமிடங்கள் அங்கு நின்றிருந் தால், அவருது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் எனப் பாதுகாப்பு நிபுணர்கள் பின்னர் குறிப்பிட்டனர். ஆனால், ரில்வின் சில்வாவுக்கு எதிராக நாம் கண்டது ஒரு பெயரளவு ஆர்ப்பாட்டம்.

ஒரு சுமுகமான மற்றும் நட்பான ஆர்ப்பாட்டம். ஏதோ கடமைக்காகச் செய்த ஆர்ப்பாட்டம்-என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29 .11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org